DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.13/2019**
**P.W.2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செல்வராஜ் |
| Father's Name | : | திரு.பிச்சைமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 62 |

(Accused 2 is present. Accused 1 and 4 are absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th day of May 2026.

**முதல் விசாரணை**

நான் முத்தியம்பாளையத்தில் வசிக்கிறேன். இந்த வழக்கில் புகார் கொடுத்தது எனது மனைவி கீதா ஆவார். இந்த வழக்கின் முதல் எதிரி மணிவேலுவிடம் நான் 2013 ஆம் வருடம் ரூபாய் 4 லட்சம் குடும்பச் செலவுக்காகவும், பிள்ளைகளின் படிப்பு செலவிற்காகவும், மனைவியின் மருத்துவ செலவுக்காகவும் கடன் வாங்கி இருந்தேன். அதற்கு உரிய வட்டி பணத்தை ஒவ்வொரு மாதமும் செலுத்தி வந்தேன். 2015 ஆம் வருடம் வறட்சி ஏற்பட்ட காரணத்தினால் சரியாக வருமானம் இல்லாததால் கடனுக்கு உரிய வட்டியை கட்ட முடியாத நிலை ஏற்பட்டது. முதல் எதிரி மணிவேல் என்னிடம் அடிக்கடி வட்டி கேட்டு தொந்தரவு செய்து வந்தார். நான் அவரிடம் சிறிது கால அவகாசம் கேட்டேன். தருவதாக சொல்லி விட்டுச் சென்றார். அதன் பின்னர் ஒருவாரம் கழித்து 15 அடியாட்களை அழைத்துக் கொண்டு என் வீட்டிற்கு வந்தார். பீரோவில் இருக்கக்கூடிய பத்திரத்தை எடு என்று என்னை கத்தியை காண்பித்து மிரட்டினார்கள். நான் சாவியை அவர்களிடம் கொடுத்து விட்டேன். அவர்கள் பீரோவை

திறந்து பார்த்து பத்திரங்களை படித்துப் பார்த்தார்கள். அதன் பிறகு என்னை அழைத்துக் கொண்டு பத்திர அலுவலகத்திற்கு சென்றார்கள். அங்கு தனியாக ஒரு அறையில் வைத்து பத்திரத்தை எழுதி பதிவு செய்துவிட்டார்கள். அவ்வாறு பத்திரம் பதிவு செய்யும்போது ஒரு முச்சலிக்கா எழுதினார்கள். அந்த முச்சலிக்காவில் ரூபாய் 11,29,000/– நான் திருப்பி செலுத்தி விட்டால் சொத்தை திருப்பி எழுதிக் கொடுத்து விடுவேன் என்று எழுதிக் கொடுத்தார். அவ்வாறு நான் பணத்தை திருப்பி செலுத்தாவிட்டால் அவர் கிரையம் செய்து கொடுத்து விட்டு மீதி பணத்தை எனக்கு தருவதாக கூறினார். அவ்வாறு இல்லை என்றால் தான் காட்டக்கூடிய நபருக்கு கிரையம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். 30.06.2015 அன்று மணிவேல் அவர்களுக்கு நான் எழுதிக்கொடுத்த கிரைய சாசனத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **அ.த.சா.ஆ.9** ஆகும். 30.06.2015 தேதியிட்ட முச்சரிக்கை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **அ.த.சா.ஆ.10** ஆகும். கிரைய பத்திரம் பதிவு செய்த பிறகு எனக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை. பத்திரம் பதிவு செய்த போது சார்பதிவாளர் என்னிடம் பணம் வாங்கி விட்டீர்களா என்று கேட்டபோது நான் பக்கத்தில் அடியாட்கள் இருந்ததால் நான் மௌனமாக இருந்தேன். அதிலிருந்து ஒரு மாத காலமாக எனக்கு மனநிலை சரியில்லாமல் போனது. ஒரு மாதம் கழித்து என் மனைவியிடம் நடந்ததை தெரிவித்தேன். ஒரு கம்ப்யூட்டர் சென்டருக்கு சென்று நடந்ததை சொன்னபோது அவர்கள் புகார் மனு எழுதிக் கொடுத்தார்கள். அந்த புகார் மனுவை முதலமைச்சர் தனிப்பிரிவு, நில மோசடி பிரிவு, மாவட்ட ஆட்சியர், மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு எல்லாம் அனுப்பி வைத்தோம். அதன் அடிப்படையில் விசாரணையானது 11.10.2015 அன்று துறையூர் காவல் நிலையத்தில் வைத்து நடைபெற்றது. துறையூர் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடைபெற்ற போது வெளியே ஒரு மரத்தடியில் வைத்து கட்டப்பஞ்சாயத்து செய்து ஒரு ஒப்பந்தம் எழுதி வாங்கினார்கள். அந்த கட்டப்பஞ்சாயத்து நடவடிக்கையை கண்டித்து முதலமைச்சர் தனிப்பிரிவு, நில மோசடி பிரிவு, மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களுக்கு புகார் மனு அனுப்பி வைத்தேன். அதன் பிறகு முசிறி கோட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்து விசாரணை நடைபெற்றது.

30.10.2015 அன்று முதல் எதிரி மணிவேல் இரண்டாவது எதிரி சண்முகத்திற்கு மோசடியாக ஒரு கிரைய பத்திரத்தை எழுதி வைத்துவிட்டார். தற்போது வரை நான் தான் அந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.10.2015 அன்று முதல் எதிரி மணிவேல் இரண்டாவது எதிரி சண்முகத்திற்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **அ.த.சா.ஆ.11** ஆகும். நான் அதிகாரிகளிடம் கொடுத்த மனுவின் பேரில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் கடந்த 01.08.2015 அன்று துறையூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். அது நிலம் தொடர்புடைய வழக்காகும். வழக்கறிஞர் செல்லமுத்து அவர்கள் கடந்த 21.02.2016 அன்று வீட்டை காலி செய்ய கேட்டு ஒரு அறிவிப்பு அனுப்பினார். அதன் நகல் **அ.த.சா.ஆ.12** ஆகும். 15.08.2017 அன்று எனது வயலில் சோளம் பயிர் செய்து இருந்தேன். நான் கூலி ஆட்களை வைத்து களை எடுத்துக் கொண்டு இருந்தபோது எதிரிகள் நால்வரும் வந்து பயிர்களை டிராக்டர் கொண்டு நாசம் செய்து விட்டார்கள். என் மனைவி தடுக்கச் சென்றார். இறந்து போன மூன்றாவது எதிரி அருணாச்சலம் என் மனைவியின் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி விட்டார். அதை தடுக்கச் சென்ற என்னை இறந்து போன மூன்றாவது எதிரி அருணாச்சலமும் முதல் எதிரி மணிவேலும் தாக்கி விட்டார்கள். இரண்டாவது எதிரி சண்முகம் அவர்களை தூண்டி விட்டுக் கொண்டு இருந்தார். கூலி ஆட்கள் பயந்து கொண்டு ஊருக்கு ஓடி விட்டார்கள். அவர்கள் என்னை பார்த்து பற தேவடியா மகனே இங்க இருந்து ஓடிவிடு இல்லையென்றால் கொளுத்தி விடுவோம் என்று மிரட்டினார்கள். அருகில் இருந்த கருப்பு கோவிலுக்கு சாமி கும்பிட வந்த நபர்கள் என்ன என்று கேட்டார்கள். அங்கு வந்த கரூர் மாவட்டம் பழைய ஜெயங்கொண்டம் ஊரைச் சேர்ந்த கருப்பன் மகன் பூபதி என்பவர் ஓடி வந்து எங்களை மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார். நாங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது துறையூர் காவல் நிலையத்தில் இருந்து வந்த காவல்துறை அதிகாரி விசாரித்தார். என் மனைவி உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். நான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வந்து விட்டேன். அன்று இரவு பத்து மணி ஆனதால் என்னை மறுநாள் காலையில் துறையூர் காவல் நிலையம்

வர சொன்னார்கள். மறுநாள் காலையில் நான் துறையூர் காவல் நிலையம் சென்ற போது 30க்கும் மேற்பட்ட நபர்கள் கூடி என்னை கார்களில் வந்து அடிப்பதற்கு தயாராக இருந்தார்கள். அங்கு இருந்தவர்கள் என்னை வெட்டி விடுவேன் என்றும், குத்தி கொலை செய்து விடுவேன் என்றும் மிரட்டினார்கள். துறையூர் காவல் நிலையத்தில் இருந்த காவல் ஆய்வாளரிடம் நான் நடந்த விஷயத்தை சொன்னேன். அங்கிருந்த காவல் ஆய்வாளர் பெரிய நபர் ஆள் பலம், பண பலம், அரசியல்வாதி பலம் உள்ளதால் உன்னால் ஒன்னும் செய்ய முடியாது சமாதானமாக போய்விடு என்றார்கள். நம் சமாதானமாக போக முடியாது என்றும் வழக்கு போடுங்கள் என்று சொன்னேன். அங்கிருந்த போலீஸ் அதிகாரி என்னிடம் வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கிவிட்டு வெளியே போய்விடு என்று விரட்டி விட்டார். நான் 15 நாட்கள் தலைமறைவு ஆகிவிட்டேன். அதன் பிறகு சொந்த பந்தங்கள் அனைவரும் வந்த பிறகு பயம் தெளிந்த பிறகு முதலமைச்சர் தனிப்பிரிவு, நில மோசடி பிரிவு, மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு புகார் மனு அனுப்பி வைத்தேன். எனது மனுவின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே நான் மாண்புமிகு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்தேன். நான் இல்லாத நேரத்தில் போலீசார் என் மனைவியிடம் அரசாங்கத்தில் இருந்து காசு தருவதாக சொல்லி கையொப்பம் வாங்கி விட்டு ஒரு துண்டு சீட்டை கொடுத்துவிட்டு சென்று விட்டார்கள். அந்த ரசீதை பார்த்த பிறகு தான் என் மனைவி கொடுத்த புகாரின் அடிப்படையிலான வழக்கு சங்கதிகளை பொறுத்தவரையில் பிழையானது என்று முடிவு செய்து இருந்த விபரம் எனக்கு தெரிய வந்தது. அதன் பிறகு என் மனைவி இந்த குற்றமுறையை தாக்கல் செய்திருக்கிறார்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

# Web copy